பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 30 செவ்வாய்க்கிழமை (15.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 260

# செஞ்சோலைச் சிறார்கள் 61 பேர் 'கிபிர்' குண்டு வீச்சில் கோரப்பலி!

## முல்லைத்தீவில் நேற்றுக்காலை கொடூரம்
## 130 இற்கும் மேற்பட்டோர் உயிருக்குப் போராட்டம்!

### விடுதலைப் புலிகள் அதிர்ச்சி! கடும் கண்டனம்!

### நேரில் வந்து பார்க்குமாறு சர்வதேச அமைப்புகளுக்கு அழைப்பு

- முல்லைத்தீவிலிருந்து உதயன் செய்தியாளர் மு.கந்தசாமி -

முல்லைத்தீவு, ஓகஸ்ட் 15

முல்லைத்தீவில் அமைந்திருக்கும் 'செஞ்சோலை' சிறுவர் இல்ல வளாகம் நேற்றுக்காலை இலங்கை விமானப் படை 'கிபிர்' ஜெற் விமானங்களின் கொடூர குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி அழிந்தது. அங்கு தங்கியிருந்த - எதுவும் அறியாத - அப்பா விச் சிறார்கள் சுமார் அறுபது பேர் துடிதுடித்துப் பலியாகியிருக்கின்றனர். படுகாயங்களுக்குள்ளான மேலும் 130 சிறார்கள் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் உட்பட செஞ்சோலை இல்லத்தைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் சிறுமிகளும் ஒன்றாகக் கூடியிருந்த வளாகம் மீதே விமானப்படை விமானங்கள் குண்டுகளைப் பொழிந்துள்ளன.

காலை நேரம் - கண் இமைக்கும் நேரத்தினுள் - நிகழ்ந்து முடிந்த இந்தக் கொடூர அனர்த்தம் வன்னிப் பிரதேச மக்களின் உள்ளங்களை உலுக்கிவிட்டிருக்கின்றது. (04 ஆம் பக்கம் பார்க்க)



மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்...

## புலிகளின் இராணுவ இலக்கு மீதே குண்டு வீசினோம் அதை உலகிற்கு நிரூபிக்கத் தயார் என்கிறார் ரம்புக்வெல

கொழும்பு, ஓக.15

முல்லைத்தீவில் நன்கு இனங்காணப்பட்ட புலிகளின் பயிற்சி நிலையம் ஒன்றின் மீதே விமானப் படையினர் மிகத் துல்லியமாக குண்டுவீசித்தாக்கியிருககின்றனர். இலக்கை நிரூபிப்பதற்காக நிரூபிப்பதற்கான வீடியோ பதிவுகள் எம்வசம் உள்ளன. தேவைப்படின் சர்வதேச அமைப்புகளுக்கு அதனைக் காண்பிப்போம்.

- இப்படித் தெரிவித்திருக்கிறார் அரசின் பாதுகாப்பு விவகாரம் தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல.

முல்லைத் தீவில் அப்பாவிச் சிறார்கள் 61 பேர் உயிரிழக்கக் காரணமான 'செஞ்சோலை' சிறுவர் இல்லம் மீதான தாக்குதல் பற்றிக் கருத்து வெளியிட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

பொதுமக்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது முழுப் பொய் தாக்குதல் குறித்த வீடியோ படம் எங்களிடம் இருக்கிறது. அதை 'யுனிசெவ்' மற்றும் சர்வதேச அமைப்புகளிடம்

(04ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நடைபெற்ற பகுதியில் இராணுவ நிலைகள் இல்லை!

### உறுதிப்படுத்துகிறார் கண்காணிப்புக் குழுத் தலைவர்

கொழும்பு, ஓக. 15

முல்லைத் தீவில் அரசுப் படைகள் குண்டுத் தாக்குதல் நடத்திய பகுதியில் எந்தவித இராணுவ நிலைகளையோ, ஆயுதங்களையோ காணமுடியவில்லை என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸன் தெரிவித்திருக்கிறார்.

முல்லைத்தீவில் செஞ்சோலை' வளாகப் பகுதிக்கு நேரில் சென்ற தமது பிரதிநிதிகள் 'அங்கு தாங்கள் இராணுவ நிலைகளையோ, ஆயுதங்களையோ காணவில்லை' என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர் என்று ஹென்றிக்ஸன் தெரிவித்திருக்கிறார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் தூதருக்குப் பாதுகாப்பு வழங்கிய ராணுவ வாகன அணி மீது குண்டுத் தாக்குதல்!

### 4 படையினர், 3 சிவிலியன்கள் உயிரிழப்பு! 17 பேர் படுகாயம்!! ஓட்டோவில் கிளைமோரைப் பொருத்தி வெடிக்கவைப்பு!!!

கொழும்பு, ஓக.15

- கொழும்பு, கொள்ளுப்பிட்டி - 'லிபேர்டி' சுற்று வட்டத்துக்கு அருகில் பாகிஸ்தான் தூதுவரின் வாகனத்துக்குப் பாதுகாப்பு வழங்கிச் சென்ற இராணுவ வாகனத் தொடரணியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதலில் மூன்று படையினர் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர்.

குண்டுத் தாக்குதலில் பாகிஸ்தான் தூதுவருக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

கொள்ளுப்பிட்டி லிபேர்டி சுற்றுவட்டத்துக்கு அப்பால் - 'பிளவர்' வீதிச் சந்திக்குச் செல்லும் வீதியில் - 100 மீற்றர் தூரத்தில் - இக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இத் தாக்குதலில் கொல்லப்பட்ட 7 பேரில் நால்வர் இராணுவத்தினர் எனவும் மூவர் சிவிலியன்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சிவிலியன்களில் ஒருவர் பெண்ணாவார்.

குண்டு வெடிப்பில் 17 இற்கும் மேற்பட்டோர் காயமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர். இவர்களில் இருவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பாகிஸ்தான் சுதந்திர தின வைபவங்களுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளுக்கு 'டிபெண்டர்' வானத்தில் பாதுகாப்பு வழங்கிச் சென்ற இராணுவத்தினரை இலக்கு வைத்தே இக் கிளைமோர் குண்டு வெடிக்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனத் தொடரணி சென்ற வீதியிலுள்ள குறுக்கு வீதி ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவிலேயே இக் கிளைமோர் குண்டு பொருத்தி வைக்கப்பட்டிருந்ததாக ஆரம்ப விசாரணைகளிலிருந்து (04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



முல்லைத்தீவில் செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது இலங்கை விமானப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் அங்குள்ள கட்டடம் ஒன்று முற்றாக சிதைந்து போய்க்கிடப்பதையும் காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படுவதையும் உயிரிழந்தவர்களின் சடலங்கள் சிலவற்றையும் படங்களில் காணலாம்.

# மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் பூரண ஹர்த்தால்; இயல்பு நிலை பாதிப்பு

பாண்டிருப்பு,ஓக.15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த வேண்டுகோளின் பேரில் நேற்று மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் பூரண ஹர்த்தால், துக்கதினம் என்பன அனுஷ்டிக்கப்பட்டன.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் கொடூரமான நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்திற்கு வெளிக்காட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தால், துக்க தினம் என்பவற்றின் காரணமாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் நேற்று இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

இம்மாவட்டங்களில் உள்ள அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள், பொதுச் சந்தைகள் எவையும் இயங்கவில்லை. வர்த்தக ஸ்தாபனங்கள் யாவும் மூடப்பட்டுக்கிடந்தன. வைத்தியசாலைகளின் வெளி நோயாளர் பிரிவுகள் இயங்கவில்லை.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் உள்ள பிரதான நெடுஞ்சாலைகளான கல்முனை - மட்டக்களப்பு, மட்டக்களப்பு - வாழைச்சேனை, கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - அம்பாறை ஆகியன வாகன ஓட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன. இம்மாவட் டங்களில் பாதுகாப்புப் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தக் ஹர்த்தால் காரணமாக நேற்று நடைபெறவிருந்த பல பொது நிகழ்வுகள் பிற்போடப்பட்டன. நேற்று கல்முனை தமிழ்க் கோட்டப் பாடசாலை களுக்கிடையே நடத்தப்படவிருந்த தமிழ் மொழித் திறன் போட்டிகளும் இடம்பெறவில்லை. இதேபோன்று, பட்டிருப்பு வலயத்தில் உள்ள பாடசாலைகளில் இடம்பெற்று வரும் இரண்டாம் தவணைப் பரீட்சையும் ஒத்தி வைக்கப்பட்டது.

இக் ஹர்த்தால் தொடர்பாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

* பொது மக்களின் குடிமனைகள் மீது மேற்கொள்ளப்படும் விமானக் குண்டுத் தாக்குதல்களைக் கண்டித்தல்.
* மூதூரில் இருந்து இடம்பெயர்ந்து அவதியுறும் மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையைக் கண்டித்தல்.
* போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை அளிப்பதில் அரசு காட்டும் இன ரீதியான புறக்கணிப்புக்களைக் கண்டித்தல்.
* மூதூரில் பணியாற்றிய தொண் டர் நிறுவனப் பணியாளர்கள் 17 பேரை அரச படையினர் சுட்டுக் கொன்றதை வன்மையாகக் கண்டித்தல்.
* அரசாங்கம் சமாதானம் என்ற போர்வையில் தமிழினப் படுகொலைகளைத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்வதைக் கண்டித்தல் என்பவற்றுக்காகவே ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது என்று அந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# வடக்கு - கிழக்கில் புலிகள் பகுதிக்கான சகல பாதைகளையும் மூடியது அரசு

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வதற்கான பாதைகள் அனைத்தையும் இராணுவத்தினர் மூடியிருக்கின்றனர்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்துக்குச் செல்லும் ஓமந்தை, உயிலங்குளம் வீதிகள் கடந்த சில தினங்களாகவே மூடப்பட்டநிலையில் இருக் கின்றன.

திருகோணமலையில் மூதூர் கிழக்கிற்குச் செல்லும் சகல பாதைகளும் மூடப்பட்டுள்ளன.

இதனைவிட மட்டக்களப்பு மாவட்டத்தில் வவு ணதீவுப் பாலம், செங்கலடி - பதுளை வீதியில் உள்ள கறுப்புப்பாலம், சித்தாண்டிப் பாலம் மற்றும் சந்தனமடு வீதி என்பவற்றின் ஊடான போக்குவரத்துகள் நேற்று முதல் தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

# பளை, பச்சிளைப்பள்ளியிருந்து பத்தாயிரம் பேர் இடம்பெயர்வு

பரந்தன், ஓக.15

வடக்கே முகமாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடந்த சில நாள்களாக இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பளை மற்றும் பச்சிளைப்பள்ளி பிரதேசங்களிலுள்ள 2 ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரம் பேர் இடம் பெயர்ந்திருந்திருக்கின்றனர். இவர்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலும் நண்பர்கள், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்திருக்கின்றனர்.

கிளிநொச்சியில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் 270 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 350 பேரும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பாடசாலைகளில் 250 குடும்பங்களைச் சேர்ந்த 1,250 பேரும், பூநகரி பிரிவில் 900 பேரும் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களுக்கு உணவு மற்றும் ஏனைய வசதிகளை வழங்கி பராமரிக்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டிருக்கிறது.

## சார்க் போட்டிகளுக்காக பாடசாலைகள் மூடல்

யாழ்ப்பாணம், ஓக.15

நாட்டில் உள்ள உலக பாடசாலைகளும் இன்று முதல் இரு வாரங்களாக மூடப்படுவதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் விளையாட்டுப் போட்டியை ஒட்டி பாடசாலைகள் மூடப்படுகின்றன என் றும் -

எதிர்வரும் 28 ஆம் திகதி பாடசாலைகள் மீளத் திறக்கப்படும் என்றும் - கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

(ம-1)

## பூநகரியில் நேற்று கிபிர் குண்டு வீச்சு

பூநகரிப் பகுதிமீது நேற்று மாலை 6 மணிக்கு கிபிர் குண்டு வீச்சை நடத்தியுள்ளது.

சேதவிவரங்கள் வெளியாகவில்லை.

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (ம-1)

## மட்டு. பூநொச்சிமுனையில் இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, காத்தான்குடி, பூநொச்சிமுனைப் பகுதியில் நேற்று நண்பகல் 12.15 மணியளவில் இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டு. கல்லடியைச் சேர்ந்த எஸ்.புவிராஜ் (வயது - 20) என்பவரே கொல்லப்பட்டார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த இளைஞனின் சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## நாச்சிமார் கோயிலடியில் இளைஞர் சுட்டுக்கொலை

நாச்சிமார் கோயிலுக்கு சமீபமாக கே.கே.எஸ். வீதியில்நேற்று நண்பகல் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இனங்காணப்படாத நிலையில் அவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப் பட்டுள்ளது. (ம-1)

## கோப்பாயில் இரு இளைஞர்கள் நேற்று மாலை சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஓக.15

கோப்பாய் ராஜபாதையில் நேற்று மாலை இருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சமுர்த்தி அலுவலரான பவானந்தன் சஞ்சீவ்குமார் (வயது 33), மனித நலன்புரி சங்கப் படையைச் சேர்ந்த இ.துவாரகன் (வயது 18) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இவர்களை மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் சுட்டுவிட்டுத் தப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தினார்.

சடலங்கள் சம்பவ இடத்திலேயே கிடக்கின்றன என்றும் சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் காண உதவுமாறும் - கேட்கப்பட்டுள்ளது.(ம-1)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 - 04 - 1907



ஆண்டவன் அடியில் 07 - 08 - 2004

### திருமதி தில்லைவனம் வீரவாகு

(திதி: ஸப்தமி 15.08.2006)

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களைப் பிரிந்து ஆண்டுகள் இரண்டானாலும்
ஆறாது எங்கள் துயரம் அணையாது உங்கள்நினைவு
ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தாவடிதெற்கு,
கொக்குவில்.

வி.செல்வராசா(மகன்),
திருமதி ம.இரத்தினமணி (மகள்),
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சபாரெத்தினம் தங்கலெட்சுமி

(நாரந்தனை, புங்குடுதீவு)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது வைமன் றோட்டில் வசித்துவந்தவருமான திருமதி சபாரெத்தினம் தங்கலெட்சுமி 12.08.2006 சனிக்கிழமை காலாமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரெத்தினத்தின் (மு.ப.நோ.கூ. சங்கம்) அன்பு மனைவியும் நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் ரஞ்சனி தேவி (புங்குடுதீவு மு.ப.நோ.கூ.சங்கம்), காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன்(ஜேர்மனி), ஸ்ரீதரன்(ஜேர்மனி), றாஜினி, ஸ்ரீதயாளன் (மி.பொ. திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயும் நித்தியானந்தன்(சவூதி), சாந்தினி(ஜேர்மனி), சத்தியதேவி (ஜேர்மனி), அமிர்தகலா(திருமலை) ஆகியோரின் அன்பு மாமியும் நிரோஜன் (யாழ். இ.ஆ.பாடசாலை), சாருஜன், சிவருஜன் (ஜேர்மனி), சதுர்சிகா, சதுர்ஜன்(திருமலை) ஆகியோரின் அன்புத் பேர்த்தியும் மனோன்மணி, நகுலாம்பிகை, பொன்மணி (ஆசிரியை), பராசக்தி, திருச்செல்வம் (ஆசிரியர்), சிந்தாமணி, மங்கையர்கரசி, கிருஷ்ணபாலா (ஆசிரியர்), சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதக்கிரியைகள் 13.08.2006 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/3, வைமன் றோட்,நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா ஆச்சாரி இரத்தினம் ஆச்சாரி



நாவலப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 188/1, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா ஆச்சாரி இரத்தினம் ஆச்சாரி நேற்று (14.08.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் சோபிநாத், ஜனார்தனன், சுஜன், சங்கீதா ஆகியோரின் தந்தையும் சசிக்குமாரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2006) புதன் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்ப்டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

188/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0776621828

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இரத்தினசபாபதி திருமேனிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை -யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச ம.வி.)



புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கன்னாதிட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசபாபதி திருமேனிப்பிள்ளை 13.08.2006 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயண பிள்ளை - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் இரத்தின சபாபதி (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் வசந்தி (ஆசிரியை - யா/ சன்மார்க்க மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புத் தாயும் புனிதவதி, காலஞ்சென்ற முத்துலிங்கம் (வர்த்தகர்) மற்றும் அருள்லிங்கம் (இளைப்பாறிய கிராம சேவையாளர்- வேலணை) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற மார்க்கண்டு (வர்த்தகர்), வரதலட்சுமி,, லோகநாயகி (இளைப்பாறிய ஆசிரியை), சிவக்கொழுந்து, பராசக்தி,காலஞ்சென்ற கனகசபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று(14.08.2006) திங்கட் கிழமை புங்குடுதீவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சி.இரத்தினசபாபதி
(கணவர்),
புங்குடுதீவு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# பேரினவாதக் கொடூரத்தின் குரூரப் பரிமாணம் இது!

தமிழின அடக்குமுறையின் உச்சம், குரூர வன்முறை வடிவம் எடுத்து புதுக்குடியிருப்பில் தனது கோரத் தாண்டவத்தை நடத்தியிருக்கின்றது. சிங்களப் பேரினவாதத்தின் மேலாண்மைத்தனம் தமிழின அழிப்பு என்ற வெறித்தனத்தில் எவ்வளவு கொடூரமாக உள்ளது என்பதற்கு செஞ்சோலையில் நேற்றுக் காலை அரங்கேறிய காட்டுமிராண்டித்தனம் மற்றொரு துன்பியல் சாட்சியமாகும்.

மனித நேயப் பண்புகளினதும், நாகரிக நடைமுறைகளினதும் ஒழுக்க சீலங்களைப் புறக்கணித்து, உதாசீனப்படுத்தி, இனக் காழ்ப்புணர்வில் ஊறிப் போயிருக்கும் கொடிய ஒடுக்குமுறையினதும், இராணுவ வெறியாட்டத்தினதும் கொலை வெறிக்கு ஐம்பதுக்கும் அதிக தமிழ்ப் பிஞ்சுகள் உடல் சிதறி இரையாகியிருக்கின்றன. மேலும் அறுபதுக்கும் அதிக சிறார்கள் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

யுத்தத்தில் பெற்றோரை இழந்து ஆதரவற்றவர்களாக - நிர்க்கதி நிலையில் - பரிதவித்த சிறுவர்களை அரவணைத்து, ஆதரித்து, வாழ்வளிக்க உருவாக்கப்பட்டதே செஞ்சோலை இல்லம். அந்த நிறுவனத்தை உருவாக்கியவர்கள் - பராமரித்து செயற்படுத்துபவர்கள் - விடுதலைப் புலிகளாக இருக்கலாம். ஆனால், அது ஆதரவற்ற குழந்தைகளுக்கென உருவாக்கப்பட்ட ஒரு கோயில்.

அத்தகைய புனித ஸ்தலத்தின் மீது கோர வான்வழித் தாக்குதலை நடத்தி, பிஞ்சுச் சிறார்களை குற்றுயிரும், குலையுயிருமாக்குவதற்கு உத்தரவிட்டு, வழிகாட்டிய அதிகாரத்தின் அரூபக் கரங்கள் மனித சரிதத்தில் மன்னிக்கப்படவே முடியாதவை; மனித நாகரிகத்தின் விழுமியங்களுக்கே அப்பாற்பட்ட குரூர மிலேச்சத்தனத்தின் மறுபிறப்பாகவே அவை இருக்க முடியும்.

அரச பயங்கரவாதத்துக்கு எதிராக - தமது இனத்தின் இருப்புக்காக - தமிழர்கள் நடத்தும் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச சமூகத்தின் முன்னால் பயங்கரவாதமாகச் சித்திரித்துக்கொண்டு, தனது தமிழின அழிப்புக் கொடூரங்களை மறைத்து வரும் சிங்களப் பேரினவாத அரசு, இப்போதும் இந்தக் கோரக் கொலைவெறியாட்டத்தை நடத்திவிட்டு, அதையும் மூடி மறைக்க முயற்சிக்கின்றது. தமிழின அழிப்பை மும்முரமாக முன்னெடுத்துக் கொண்டு - அதன் ஓர் அங்கமாக இந்தக் கோரக் கொலை வெறியாட்டத்தை நடத்தி விட்டு - அதை வெறும் வதந்தி, புலிகள் செய்யும் பொய்ப் பிரசாரம் என்றெல்லாம் தனது பரப்புரையை விரைந்து ஆரம்பித்துவிட்டது அரசுத் தரப்பு. வான்வழித் தாக்குதல் கொடூரம் பற்றிய செய்தி வெளி யானதும் இலங்கை அரசின் ஊடக ஊதுகுழல்கள் அப்படித்தான் அறிவித்தன.

திருகோணமலை நகரில் அப்பாவித் தமிழ் மாணவர் ஐவர் படுகொலை, அல்லைப்பிட்டியில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை, மன்னார் - வங்காலைப் படுகொலைகள், மூதூரில் பிரெஞ்சு தொண்டர் நிறுவனத்தில் பணியாற்றிய 17 அப்பாவித் தமிழர்கள் படுகொலைகள், அல்லைப்பிட்டி, மண்கும்பான் புனித பிலிப் நேரியார் அகதி முகாம் மீதான ஷெல் வீச்சுப் படுகொலைகள் எனத் தமிழர்களுக்கு எதிராக அண்மைக் காலத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலைகள், பலப்பல. இவை தவிர இக்கால கட்டத்தில் தமிழர் தாயகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஐந்நூறுக்கும் அதிகமான தமிழர்கள் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்ற இந்தப் படுகொலைகளை மூடி மறைக்க முடியாத நிலையில், கொலைச் சூத் திரதாரிகளை மறைத்து - அடையாளம் கண்டு அம்பலப்படுத்தத் தவறி - தனது கைவரிசையைக் காட்டியது தென்னிலங்கை.

ஆனால், இப்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள புதுக்குடியிருப்பில் கூட்டமாக - கொத்தாக - ஐம்பதுக்கும் அதிக இளம் சிறார்களை விமானக் குண்டு வீச்சு மூலம் கொன்றொழித்த தனது கைவரிசையை, அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று கூறி மூடி மறைத்து, சமாளிக்க முயல்கின்றது தென்னிலங்கை அரச நிர்வாகம்.

யாழ்.நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்த அப்பாவித் தமிழர்கள் சுமார் நூற்றியெழுபது பேரை விமானக் குண்டு வீச்சு மூலம் ஒரேயடியாகக் கொன்றொழித்த கொடூரம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தது.

அப்போது யாழ்.குடாநாடு அரச இராணுவத்தின் முழு முற்றுகைக்குள் இருந்தது. வெளியிடங்களோடு தொலைத் தொடர்பு வசதி எதுவுமற்ற - தகவல் பரிமாற்றத்துக்கு வாய்ப்பற்ற - அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவ்விடயத்தை முற்றாகவே - முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்தது போல - சர்வதேசத்துக்கும் ஒளித்தது அப்போதைய சந்திரிகா அரசு. அப்படி விமானக் குண்டு வீச்சு நடக்கவேயில்லை என்று பெரும் பிரசாரத்தை முன்னெடுத்து சிங்களத் தலைமைக்குத் தனது எஜமான விசுவாசத்தைக் காட்டிப் புகழீட்டியவர் (?) அப்போதைய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

அன்றைய நிலைமை வேறு; இன்றைய நிலைமை வேறு.

இப்போது நவீன தொலைத் தொடர்பு வசதிகள், செய்மதி மூலமான தொலைபேசி இணைப்புகள் என்று உலகம் 'பூமிக் கிராமமாக' சுருங்கி விட்டது. இந்த வசதிகள் எல்லாம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னியிலும் நிறையவே உண்டு.

தவிரவும், உலகின் எந்த வான் பரப்பிலும் அசையும் ஒவ்வொரு வான் கலத்தின் நகர்வையும் துல்லியமாகக் கண்காணிக்கும் வசதிகள் மேற்குலகிடம் உண்டு. வீதியில் மோட்டார் சைக்கிளில் வேகமாகப் பயணம் செய்துகொண்டிருப்பவரின் கையிலிருக்கும் மணிக்கூட்டின் நேரத்தை பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒருவரால் செய்மதி இணைப்பு ஊடாகத் தெளிவாகப் பார்க்கக் கூடிய அளவுக்கு நவீன விஞ்ஞானம் வளர்ந்து விட்ட இந்த நிலையில், விமானக் குண்டு வீச்சுப் பேரழிவை ஏற்படுத்தி விட்டு அதைச் சுலபமாக மறுத்து யாரும் தப்பிவிட முடியாது.

ஆகவே, பிஞ்சுகளைக் கொன்றொழித்த குற்றத்திலிருந்து ஆட்சியாளர்கள் இலகுவாகத் தப்புவது இயலாத காரியம்.

சிறுவருக்கு எதிரான குற்றங்கள் குறித்து அதிகம் நீலிக் கண்ணீர் வடிப்பவர்கள் இப்போது என்ன கூறப் போகிறார்கள்?

'கல்லார்ப் பிணிக்கும் கொடுங்கோல்' போல, கொடுங்கோல் ஆட்சி முறைக்கு வக்காலத்து வாங்கித் தம்மையும் 'கல்லார்' ஆக நிரூபிக்கப் போகின்றார்களா?

உலகம் அவர்களை - அவர்களின் பிரதிபலிப்பை - பார்த்துக் காத்திருக்கின்றது.

# உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு விலைகள் விண்ணில் ஏறி நிற்கின்றன!

## மாற்று ஏற்பாட்டுக்கு அரச அதிபர் கொழும்பிடம் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ். குடாநாட்டிற்கான அனைத்து விநியோகப் பாதைகளும் தடைப்பட்டுள்ள நிலையில் மக்களுக்கான உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது. இதனால் பொருள்களின் விலைகளும் எக்கச் சக்கமாக ஏறியுள்ளது. நேற்று சற்று நேரம் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்த போது பொருள்களை வாங்குவதில் பொதுமக்கள் பெரிதும் முண்டியடித்தனர். இதனைப் பயன்படுத்திக்கொண்ட வர்த்தகர்கள் விலைகளை உச்சத்திற்கு எகிற வைத்தனர்.

உடனடியாக ஒரு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வியாபாரிகள் முயல்கின்றனர் என்றும் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும் என்றும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

குடாநாட்டிற்கு உடனடியாக உணவுப் பொருள்களையும், எரிபொருளையும் எடுத்து வருவதற்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அரச அதிபர் நேற்றுமுன்தினமே கொழும்புக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சந்தைப்படுத்துவதற்கான பொருள்கள் எவற்றையும் அரசு சார்பில் களஞ்சியப்படுத்தி வைக்கும் ஏற்பாடுகள் எவையும் தற்சமயம் இல்லாமையால் யாழ்.செயலகம் சார்பில் உணவுப் பொருள்கள் இருப்பு ஏதுமில்லை என்றும் அரச அதிபர் தெரிவித்தார். அதே வேளை நிவாரணப் பொருள்கள் போதியளவில் கையிருப்பில் உள்ளன என்றும் நிவாரணம் வழங்கவேண்டிய தேவை ஏற்படும் பட்சத்தில் மக்களுக்கு அப் பொருள்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் சண்டை கடுமையாகி இருப்பதன் காரணமாக யாழ்.குடாநாட்டிற்கான அனைத்துப் பாதைகளும் மூடப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளாக குடாநாட்டிற்கு உணவுப் பொருள்களை எடுத்துவரும் பிரதான விநியோகப் பாதையாக ஏ-9 நெடுஞ்சாலையே இருந்து வருகின்றது. தற்போது அது முற்றுமுழுதாக மூடப்பட்டுள்ளது. எப்போது மீண்டும் திறக்கும் என்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து தனியார் வியாபாரிகள் பொருள்களைப் பதுக்கும் நடவடிக்கைகளிலும் ஆங்காங்கு ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அனேகமாக அனைத்து வியாபாரிகளுமே பொருள்களின் விலைகளை எக்கச் சக்கத்திற்கு எகிற வைத்துள்ளனர். ஊரடங்குத் தளர்வு நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பல வியாபாரிகள் தமது கடைகளில் இருந்தும் வர்த்தக நிலையங்களில் இருந்தும் பொருள்களை ஏற்றி தமது வீடுகளுக்கு எடுத்துச் சென்றதை பெருமெடுப்பில் அவதானிக்க முடிந்தது.

நேற்று முற்பகல் 10 மணிமுதல் 12.30 மணிவரை ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட சமயத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முண்டியடித்த பொதுமக்கள் பொருள்களின் விலைகளைக் கேட்டு ஏக்கமடைந்தனர். அவை ஆகாயத்தின் உச்சியில் போய் உட்கார்ந்துகொண்டிருந்தன. பல பொருள்களைப் பெறமுடியாத தட்டுப்பாட்டு நிலைமையும் காணப்பட்டது. அச்சத்தின் காரணமாக அளவுக்கதிகமாகப் பொருள்களை மக்கள் வாங்க முற்பட்டதும் இதற்கொரு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையே, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள்களைக் கப்பல் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார். (ம)

# அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் உயிரிழந்தோர் சடலங்கள் மீட்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஓக.15

அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பகுதிகளில் ஷெல் தாக்குதலில் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களின் உடல்கள் தேடுவாரற்றுக் கிடந்து சிதைகின்றன. நேற்று மூன்றாவது நாளாகவும் அந்தச் சடலங்கள் கிடக்கும் இடங்களில் இருந்து அப்புறப்படுத்தப்படவில்லை. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி பொலீஸார் ஒத்துழைக்க மறுப்பதே இந்த அவல நிலைக்குக் காரணம் என்று நீதித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். தீவகத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதலின் போது அகதிகளான மக்கள் அல்லைப்பிட்டி புனித பிலிப்நேரியார் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். திடீரென அங்கே ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் 25 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்று அஞ்சப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள், யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற விசேட குழு ஒன்றினால் பத்திரமாக மீட்டு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் கொடுத்த தகவலின்படி உயிரிழந்தவர்களின் சடலங்கள் அங்கங்கே சிதறிக்கிடக்கின்றன என்று தெரிந்தது.

இதேபோன்று மண்கும்பான் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்தவர்கள் தந்த தகவலின்படி அங்கும் பலர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. அவர்களின் சடலங்களும் அப்புறப்படுத்தப்படாமல் அப்படி அப்படியே கிடக்கின்றன.

இந்தச் சம்பவங்களில் காயமடைந்தவர்களை மீட்பதற்காக யாழ். நகரில் இருந்து சென்ற யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன், உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படி ஊர்காவற்றுறைப் பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், நேற்று மாலைவரை சடலங்கள் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவில்லை. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டும் பொலீஸார் சம்பவ இடங்களுக்குச் சென்று சடலங்களை மீட்கமுடியாதிருப்பதாகக் கூறுகின்றனர்.

நேற்றுமுன்தினம் அங்கு சென்ற நீதிவான் அடங்கியவிசேட குழுவினர் நேற்றும் அங்கு செல்வதற்கு முயன்றனர். எனினும் பாதுகாப்புப் பிரிவினர் அவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை. இதனை அடுத்து இன்றாவது அங்கு செல்லமுடியுமா என்ற முயற்சியில் குழுவினர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவந்தது.

இதனால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் அந்தந்தப் பகுதிகளிலேயே கிடந்து அழுகி நாறும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இது அங்கு மேலும் சுகாதாரச் சிக்கல்களையும் ஏற்படுத்தும் அபாயமும் தோன்றியுள்ளது.

இதுவரை அந்தப் பிரதேசங்களில் இருந்து நால்வரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றை மீட்டதிலும் பொலீஸாரின் பங்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சடலங்களை மீட்கும் விடயத்தில் பொலீஸாரும் பாதுகாப்பு அதிகாரிகளும் அசிரத்தையாக இருப்பது குறித்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கடும் கண்டனம் தெரிவித்ததுடன், கண்ணீர் மல்க செய்வதறியாது தவித்துக்கொண்டிருக்கின்றனர். (ம-1)

## மரண விசாரணை நேற்று

கொடிகாமம் மற்றும் அல்லைப்பிட்டியில் ஷெல் தாக்குதல்களில் உயிரிழந்த இருவரின் மரண விசாரணைகள் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் இடம்பெற்றன.

மண்கும்பான், அல்லைப்பிட்டியைச் சேர்ந்த திருவிளங்கம் கஜேந்திரன் (வயது 19), கொடிகாமம், அல்லாரை வடக்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பிரகாந் (வயது 24) ஆகியோரின் மரண விசாரணைகளே நடைபெற்றன.

யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இந்த மரண விசாரணைகளை நேற்று நடத்தினார். (ம-1)

# ஊரடங்குத் தளர்வைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,ஓக.15

வலிகாமம் பகுதியில் நேற்று சிறிது நேரம் ஊரடங்கு தளர்த்தப்பட்டதால், பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

கொழும்புத்துறை, வளன்புரம், குருநகர், பாஷையூர் ஆகிய கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கானவர்கள் வலிகாமம் மேற்குப் பகுதியை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

கிடைத்த வாகனங்களிலும் சைக்கிள்களிலும் அவர்கள் இடம்பெயர்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அதேவேளை, தென்மராட்சியில் கரம்பன், இடைக்குறிச்சி, வரணி, குடமியன், சுட்டிபுரம், கொடிகாமம் ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 3 ஆயிரம் பேர் வடமராட்சியை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களில் 640 பேர் வடமராட்சியை வந்தடைந்துள்ளனர். அவர்கள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, கரணவாய் கலைவாணி ச.ச.நிலையம், புதுத் தோட்டம், சுடர் ஒளி ச.ச.நிலையம், புதுத் தோட்டம் அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உடனடி உதவிகளை கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மேற்கொண்டுள்ளார்.

அதேவேளை - எஞ்சிய 2 ஆயிரம் பேர் வரையில் தில்லையம்பலப் பிள்ளையார் கோயில், கப்பூது, அந்தனத்திடம் ஆகிய இடங்களில் உள்ள மரங்களுக்குக் கீழ் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பிரதேச மக்கள் தமக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இந்த மக்கள் வடமராட்சிக்கு செல்ல விரும்பிய போதும் அவர்களை அங்கு செல்ல படையினர் அனுமதிக்கவில்லை எனத் தகவல்கள் தெரிவித்தன.

இவர்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி வந்தபோது, அவர்களை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதென்றும் -

இதில் ஆசிரியரான கணவனும் அவரது மனைவியும் கொல்லப்பட்டனர் என்றும் - மக்கள் தெரிவித்தனர். (ம-1-70)

# வடமராட்சி, தென்மராட்சியில் ஊரடங்குத் தளர்வு இல்லை!

வடமராட்சி மற்றும் தென்மராட்சி பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் நேற்றுத் தளர்த்தப்படவில்லை.

மேற்படி பிரதேசங்களில் நண்பகல் ஒரு மணிமுதல் 2.30 மணிவரை ஊரடங்கு தளர்த்தப்படும் என பலாலி படைத் தலைமையகம் முன்னர் அறிவித்தது. ஆனால், அந்தப் பிரதேசங்களில் ஊரடங்கு தளர்த்தப்படவில்லை.

வடமராட்சிக்குச் செல்வதற்காகச் சென்ற 75 இற்கும் மேற்பட்டவர்கள் வல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்கள் அச்சுவேலி உலவிக் குளப் பிள்ளையார் ஆலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் என்றும் வலிகாமம் பகுதியில் கடமையாற்றி வந்த அரச மற்றும் அரசுசாரா நிறுவனங்களின் ஊழியர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வலிகாமம் பகுதியில் முற்பகல் 10 மணிமுதல் 12.30 மணிவரை ஊரடங்கு தளர்த்தப்பட்டதால் மக்கள் வெளியில் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டனர்.

சில பகுதிகளில் 11 மணிக்குப் பின் மக்களின் நடமாட்டத்தை படையினர் அனுமதிக்கவில்லை. (ம-1-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய துக்கநாள் இன்று அனுஷ்டிப்பு

கிளிநொச்சி, ஒக.15

முல்லைத்தீவில் விமானப்படையின் கொடூரக் குண்டு வீச்சில் பாடசாலை மாணவிகள் படுகொலை செய்யப்பட்டதை ஒட்டி இன்றைய தினம் தேசிய துக்க நாளாக கடைப்பிடிக்கப்பட உள்ளது.

தமிழீழத்தேசியத் துயரநாள் அறிவிப்பை தமிழீழ கல்விக் கழகம் விடுத்துள்ளது. (ஐ)

# யாழ். பல்கலை மாணவர் விடுதி மீது கைக்குண்டு வீச்சு; மாணவர் காயம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதி மீது நேற்று நண்பகல் 12 மணியளவில் கைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதில் மாணவர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தால் விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் மிகுந்த அச்சமடைந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த மாணவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

இராணுவத்தினரே இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்தினர் என்று மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (க)

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் காயம்!

யாழ்ப்பாணம், ஒக.15

யாழ். நாவலர் வீதியில் செட்டித்தெருச் சந்தியில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இளைஞர் ஒருவர் சுடப்பட்டார். அவர் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். நல்லூர், கோயில் வீதியைச் சேர்ந்த செல்லன் சஞ்சீவ் (வயது 21) என்ற இளைஞரே சுடப்பட்டவராவார்.

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பான வழக்குகளில் குற்றவாளியான இவருக்கு யாழ். நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. பிணையில் அவர் நடமாடி வந்தார். குறித்த தவணை நீதிமன்றில் சமுகமளிக்காததால் யாழ். நீதிமன்றத்தினால் அவருக்கு எதிராகப் பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பிரஸ்தாப நபரின் மூத்த சகோதரனான செல்லன் சுதர்சன் கடந்த 22ஆம் திகதி கல்வியங்காடு இராமலிங்கம் வீதியில் உள்ள மதுபான நிலையம் ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-1)

# புலிகளின் பகுதி மீது நேற்று வவுணதீவிலும் ஷெல்வீச்சு!

மட்டக்களப்பு, ஒக.15

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வவுணதீவு பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் நேற்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் மோட்டார் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டனர் என மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

இத்தாக்குதலில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும், குருஞ்சாமுனையில் குடியிருப்பு ஒன்றின் மீது விழுந்ததால் குடியிருப்பு முற்றாக சேதமடைந்துள்ளது. அந்தக்குடும்பம் மயிரிழையில் உயிர்தப்பியதாக தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு 223 ஆவது படை முகாமில் இருந்தே புலிகளின் பகுதிகளை நோக்கி மோட்டார் ஷெல்கள் வீசப்பட்டதாக தயாமோகன் கூறினார்.

## வலி.மேற்கில் இருந்த படையினர் முகாம்கள் காலி

வலி.மேற்கில் சங்கானை, சுழிபுரம், துணைவி ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த படையினர் மற்றும் பொலீஸாரின் முகாம்கள் மூடப்பட்டுள்ளன. அங்கிருந்து அவர்கள் வெளியேறிவிட்டனர்.

படையினர் வெளியேறியதையடுத்து சுழிபுரம் பகுதி முகாம் மக்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

அதையடுத்து 'பீல்ட்' பைக்கில் வந்த படையினர் பொதுமக்களைத் தாக்கினர் எனக் கூறப்பட்டது. (ம-1-29)

# தெற்கில் சிவிலியன் இலக்குகளையும் தாக்கநேரிடும்! அரச ஊடக நிலையத்துக்கு மிரட்டல் 'பக்ஸ்' செய்தி

கொழும்பு, ஒக.15

தமிழர் பிரதேசங்களில் அப்பாவி மக்களை இலக்கு வைத்து அரச படைகள் அண்மைக் காலத்தில் நடத்திய தாக்குதல்களைச் சுட்டிக் காட்டி, அவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் தொடர்ந்தால் தென்னிலங்கையிலும் பொது மக்கள் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை உள்ளடக்கிய அநாமதேய கடிதம் ஒன்று பாதுகாப்பு அமைச்சின் ஊடகத் தகவல் நிலையத்துக்கு 'பக்ஸ்' மூலம் நேற்றுக் கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அப்பாவி மக்கள் உயிரிழக்கக் காரணமான அரச படைகளின் தாக்குதல் சம்பவங்கள் பலவற்றைப் பட்டியலிட்டுச் சுட்டிக்காட்டி அந்தக் கடிதம் வரையப்பட்டுள்ளதாக ஊடகத் தகவல் நிலைய வட்டாரங்களிலிருந்து தகவல் கசிந்துள்ளது.

இந்த அநாமதேய மிரட்டல் கடிதம் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து பாதுகாப்புப் பிரிவினர் உஷாரடைந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை -

சிறுபான்மைத் தமிழ் மக்களை இலக்கு வைத்து அரசுப் படைகள் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்துமேயானால் பெரும்பான்மையின சிங்களவர்கள் வசிக்கும் தென்னிலங்கையில் குண்டுகள் வெடிக்கும் என்று 'உயர் பாதுகாப்பு வலய குடியிருப்பாளர்களின் விடுதலைப் படை' (**High Security Zone Residents Liberation Force**) என்னும் அநாமதேய அமைப்பு எச்சரிக்கை விடுத்திருப்பதாக 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டிருக்கிறது.

இந்த எச்சரிக்கை 'பக்ஸ்' மூலம் விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் ஆயுதம் தரிக்காத அப்பாவிப் பொதுமக்களை இலங்கை அரசுப் படைகள் தொடர்ந்தும் படுகொலைசெய்து வருமானால் தென்னிலங்கையில் சிவிலியன் இலக்குகள் மீதும் தாக்குதல்களைத் தொடுக்குமாறு 'உயர் பாதுகாப்பு வலயக் குடியிருப்பாளர்களின் விடுதலைப் படை'யின் மத்திய குழு நாடு முழுவதும் உள்ள அதன் போராளிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது என்று அந்த பக்ஸ் செய்தியில் கூறப்பட்டிருப்பதாக 'ரொய்ட்டர்' செய்தி மேலும் தெரிவிக்கிறது. (ஐ)

## அகதிகள் 94பேர் தலைமன்னாரில் கைது!

மன்னார், ஒக.15

தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்லவிருந்த 94 பேரையும், நான்கு இந்திய இழுவைப் படகோட்டிகளையும் தலைமன்னாரில் வைத்துப் பொலிஸார் கைதுசெய்திருக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் இழுவைப் படகுகளில் தமிழகம் செல்லத் தயாரானபோது கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்களில் பேசாலை, திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களும் அடங்கியுள்ளனர். (ஐ)

## தாக்குதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட பகுதிகளில் 10 குண்டுகள் வரை விழுந்திருப்பதற்கான அடையாளங்கள் காணப்பட்டன.

குறிப்பிட்ட நேரத்தில் 4 விமானங்கள் தாக்குதல் நடத்தின என்பதை நேரில் கண்டவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

எமக்குக் கிடைத்த தகவல்களின்படி 61 பேர் உயிரிழந்தமை தெரியவந்திருக்கிறது. தாக்குதல் நடந்த பகுதியில் ஆயுதங்களோ, போர்த்தளங்களோ இருப்பதற்கான அடையாளங்களை காணமுடியவில்லை. நாம் அறிந்தவரை இப்பகுதி போர்த்தளத்திற்கான பகுதி அல்ல. - என்றும் கண்காணிப்புக் குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ - 12)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டி தாக்கப்பட்ட இடம் ஒரு பள்ளி அல்ல என்பதை நிரூபிப்பதற்கு தயாராக இருக்கின்றோம்.

அந்த இடம் ஒரு பயிற்சி முகாமாகச் செயற்பட்டு வந்தது. அந்தப்பகுதியைச் சுற்றிப் பலத்த பாதுகாப்பும் இருந்தது. அது விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமாகவும், அந்த அமைப்புக்கு போராளிகளைத் தயார் செய்கின்ற இடமாகவுமே செயற்பட்டு வந்தது. விடுதலைப் புலிகளின் ஒரு பிரிவாகவே அந்த இடம் செயற்பட்டு வந்தது - என்றும் ரம்புக்வெல தெரிவித்தார்.

இதேவேளை -

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் பாகிஸ்தான் நாட்டுத் தூதரின் வாகன அணிக்குப் பாதுகாப்பு வழங்கிச் சென்ற படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என்று அரசு குற்றஞ்சாட்டி உள்ளது.

ஒரு அண்டை நாடு, நட்பு நாடு என்ற ரீதியில் பாகிஸ்தான் இலங்கைக்கு இராணுவ உபகரணங்களை வழங்கியுள்ளது. அதனாலேயே புலிகள் அந்த நாட்டின் தூதரை இலக்கு வைத்து இந்தத்தாக்குதலை நடத்தியுள்ளனர் என்றும் பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார்.

ஆனால், அரசின் இந்தக் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் நிராகரித்திருக்கின்றனர்.

வழமையான பாணியில் புலிகள் மீது அரசு பொறுப்பைத் தூக்கிப் போட்டுள்ளது என்று புலிகளின் இராணுவப்பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்திருக்கிறார்.

## பாகிஸ்தான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவந்துள்ளது.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதர் வலி மொஹமட் இந்தச் சம்பவத்தில் காயம் எதுவும் இன்றித் தப்பினார்.

அவரது காருக்குச் சிறுசேதம் ஏற்பட்டது என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

உயிரிழந்த நான்கு படையினரும் தூதருக்குப் பாதுகாப்பு வழங்கிச் சென்ற கொமாண்டோப் படையினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளுப்பிட்டியில் பல முக்கிய நிலையங்கள் செயற்படும் ஒரு பகுதியில் - அலரி மாளிகைக்குச் சமீபமாக - நடத்தப்பட்டிருக்கும் நேற்றைய தாக்குதல் பாதுகாப்புத் தரப்புக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

தனது தூதரின் வாகன அணி தாக்கப்பட்டிருப்பதைப் பாகிஸ்தான் அரசு கண்டித்திருக்கிறது. (ஐ)

# செஞ்சோலைச் சிறார்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் - பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் - செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் அமைந்திருக்கிறது. போரில் தாய் தந்தையரை இழந்து நிர்க்கதியான பலநூற்றுக்கணக்கான சிறார்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியை 'செஞ்சோலை' நிர்வாகம் நீண்ட பல காலமாக மேற்கொண்டுவருகிறது.

சிறார்களுக்கான கல்வி மற்றும் நலவாழ்வுத் திட்டங்கள் பலவும் இதன் நிர்வாகத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த இல்லத்தில் கடந்த இரு தினங்களாக வழங்கப்பட்ட பயிற்சித் திட்டம் ஒன்றில் பங்குபற்றுவதற்காக முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த சிறுவர்கள் பலரும் இல்லப் பிள்ளைகளுடன் சேர்ந்து அங்கு பெரும் எண்ணிக்கையில் தங்கியிருந்தனர். இந்தச் சமயத்திலேயே வளாகம் மீது விமானப்படை விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கி இருக்கின்றன.

காலை 7 மணியளவில் வன்னி வான் பரப்பினுள் நுழைந்த நான்கு 'கிபிர்' ஜெற் விமானங்கள் அந்தப் பகுதிக்கு மேல் பறந்து வட்டமடிக்காமல் வந்த உடனேயே குண்டுகளைப் பொழிந்து தள்ளின. ஒரு தடவையில் நான்கு என்ற எண்ணிக்கையில் வீசப்பட்ட 16 குண்டுகள் செஞ்சோலை வளாகத்தின் மீது பரவலாக வீழ்ந்து வெடித்தன. அந்தப் பிரதேசம் முழுவதும் பெரும் வெடிஓசைகளால் அதிர்ந்தது. புகைமூட்டமும் தீப்பிழம்புகளும் கிளம்பின. என்ன நடக்கிறது என்பதை உய்த்துணர்வதற்கிடையில் சிறார்கள் சடலங்களாகச் சாய்ந்தனர். குண்டுச் சிதறல்கள் பறந்து தாக்கியபோது ஒரே தடவையில் சுமார் 50 சிறார்கள் சாய்க்கப்பட்டனர்.

குண்டு வீழ்ந்த இடங்களுக்குச் சற்றுத் தொலைவில் நின்றவர்கள் கூட மூர்ச்சித்து இறந்தனர். வளாகக் கட்டடங்கள் தகர்ந்து பறந்தன. நொடிக்குள் வளாகப் பிரதேசம் பிணக்காடு ஆகியது.

வளாகப் பணியாளர்களான பலரும்கூட இந்த அனர்த்தத்தில் பலியாகி இருக்கின்றனர். தாக்குதல் ஓய்ந்த கையோடு பெரும் எண்ணிக்கையான மக்களும் புலிகளின் போராளிகளும் விரைந்து வந்து அங்கு குழுமினர். எதுவும் அறியாத அப்பாவிப் பிஞ்சுகளின் பிணங்கள் அங்கும் இங்கும் சிதறிக்கிடந்தன. பின்னர் அவை கும்பல் - கும்பலாக மீட்கப்பட்டு நீண்டவரிசையில் அடுக்கப்பட்டன. சடலங்கள் பலவும் சிதைவுறாமல் அப்படியே காணப்பட்டன. குருதி கொப்பளித்த நிலையில் உயிருடன் கிடந்து துடித்துக் கொண்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட சிறார்கள் அகப்பட்ட வாகனங்களிலும் அம்புலன்ஸ்களிலும் ஏற்றப்பட்டு புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மருத்துவ மனைகளுக்கு கொண்டு விரையப்பட்டனர். போதிய இட வசதிகளும் மருத்துவ வசதிகளும் இல்லாததால் ஒரே சமயத்தில் பெரும் எண்ணிக்கையில் காயக்காரர்களைச் சமாளிக்க முடியாது மருத்துவமனைகள் திணறின.

இந்த அனர்த்தத்தில் எழுபதுக்கும் மேற்பட்ட சிறார்கள் பலியாகி இருக்கின்றனர். இந்த எண்ணிக்கை கிடுகிடுவென உயரும் நிலைமை காணப்பட்டது. படுகாயங்களுடன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த சிறார்கள் பலரும் உயிரிழந்து கொண்டிருக்கின்றனர் என இந்தச் செய்தியை எழுதும் சமயம் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சுமார் 129 சிறார்கள் படுகாயமடைந்திருக்கின்றனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தாக்குதல் நடந்தவேளை சுமார் 400 சிறார்கள் அங்கு தங்கியிருந்தனர் என்பதை 'செஞ்சோலை' நிர்வாகம் உறுதிப்படுத்தி இருக்கிறது.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் ஆரம்ப முதலுதவிப் பயிற்சி ஒன்றைப் பின்பற்றுவதற்காகவே அவர்கள் செஞ்சோலை இல்லத்தில் தங்கியிருந்தனர் என்று கூறப்படுகிறது.

இந்தக்கொடூர சம்பவத்தை 'மிலேச்சத்தனமான பயங்கரவாதச் செயல்' என்று வர்ணித்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம். அப்பாவிச் சிறார்களுக்கு இழைக்கப்பட்ட - அநாகரிகமான இந்தக் கொடுமையை நேரில் வந்து காணுமாறு ஐ.நா. மற்றும் சர்வதேச சிறுவர் நல அமைப்புகளுக்கு வேண்டுகோள் விடுத்தது.

### சர்வதேச அமைப்புகளுக்கு நேரில் பார்க்க அழைப்பு

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளும் ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதிய (யுனிசெவ்) பிரதிநிதிகளும் அனர்த்தம் நிகழ்ந்த பகுதிக்கு வந்து பார்வையிட்டனர்.

அப்பாவிப் பிஞ்சுகள் ஒன்றுசேரக் கொன்றுபோடப்பட்ட இந்தக் கொடூர நிகழ்வு வன்னிப் பிரதேசத்தில் மட்டுமன்றி உலகெங்கும் தமிழர் உள்ளங்களை உலுக்கி விட்டிருக்கிறது. அதிர்ச்சி அலைகளையும் எழுப்பி விட்டிருக்கிறது. முல்லைத்தீவுப் பிரதேசம் உடனடியாகவே சோபை இழந்து - வெறிச்சோடியது. வன்னியில் ஏனைய பகுதிகளும் சோகத்தில் ஆழ்ந்துள்ளன.

யுத்தத்தில் தாய் தந்தையரை இழந்து அலையும் சிறார்களை ஓரிடத்தில் ஒன்று சேர்த்து அவர்கள் வாழ்வை மலரச் செய்யும் 'செஞ்சோலை'யின் பணியில் தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அதீத கரிசனை கொண்டிருந்தார். அவரின் எண்ணத்தில் உதித்ததே இந்த இல்லம் என்று விடுதலைப் புலிகள் கூறிவருகின்றனர்.

முல்லைத் தீவு வள்ளிபுனத்தில் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்ட செஞ்சோலை வளாகம் ஆரம்பத்தில் தாய் தந்தையரை இழந்த யுவதிகளைப் பராமரிக்கும் ஒரு நிலையமாக மட்டுமே விளங்கியது. காலப்ளபோக்கில் வேறுபல மனிதாபிமான சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் பலவும் அதனோடு இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது.

''இனிய வாழ்வு இல்லம்' என்னும் பெயரில் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஊனமுற்றோர்களைப் பராமரிக்கும் நிலையமும் அங்கு செயற்பட்டது.

'காந்தி இல்லம்' என்ற ஆண் பிள்ளைகள் பராமரிப்புக்கூடம், 'வஸந்தம்' என்கின்ற சிறுவர் பராமரிப்புக்கூடம் 'செஞ்சோலை' இல்லத்துக்கு சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத் தில் இயங்கின. இந்த இல்லங்களும் நேற்றைய வான் படைக் குண்டுவீச்சுக்கு இலக்காகியிருக்கின்றன.

செஞ்சோலை வளாகத்தில் ஐ.நா. அமைப்புகளின் கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பனவும், சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்களின் கூட்டங்கள், ஒன்றுகூடல் நிகழ்வுகளும் நடத்தப்பட்டு வந்துள்ளன. அத்துடன் அது ஒரு மனிதாபிமான சேவை நிலையம் என்பது சர்வதேச அமைப்புகளால் நன்கு அறியப்பட்டிருந்தது.

செஞ்சோலை வளாகம் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலை 'காட்டுமிராண்டித்தனமான மனிதப் படுகொலை' என்று தெரிவித்திருக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இதில் சர்வதேச சமூகம் தலையிடவேண்டும் என்று கேட்டிருக்கிறது. (ஐ- 352)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org